உ

கடவுள்துணை.

# சுப்பிரமணியர்விருத்தம்.

இஃது.

சரவணபுரம்

சண்முகமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு.

புரசைப்பாக்கம்.

ஏழுமலைப்பிள்ளையவர்களது

விவேகவிளக்கஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

ஸ்ரீமுகவருல.

சிவமயம்.

# சுப்பிரமணியர் விருத்தம்.

## கலிவிருத்தம்.

திகடசக்கரச் செம்முகமைந்துளாம்
சகடசக்கரத் தாமரை நாயகன்
அகடசக்கர வின்மணியாவுறை
விகடசக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

## பன்னிருசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

மாமேவுநவரத்ந கேயூரமணிமகுட மன்னிப் பொலிந்தமுடியும், வச்சிரநுதற்றிலக வெண்ணீறு மோராறு வதனவிம்பத்தினழகும், பாமேவுபத்தர்க்கு மடைதிறந்தன்பொழுகு பன்னிருவிழிக் கருணையும், பகரறியபழமறை பழுத்தொழுகு சிறுநகைப் பவளஞ்சிறந்த வாயுங், காமேவுகரகமல பத்தியுஞ் சேவலுங் கனகமயிலுங் கிண்கிணிக், சாலுமுன்னூலும்வடி வேலுமெனயேலுமெக் காலுந்துலங்கவருவாய், தாமோதரானந்த கோவிந் தவைகுந்த சரச கோபாலன்மருகா, சதுர்மறைகளேதந்த பரமகுரு வாய்வந்த சரவணபவானந்தனே. (ச

கண்கொண்ட பூச்சக்ர வாளகோளத்தை யொரு
கதிர்கொண்டெழுந்துசுற்றிக், ககனகூடந்தடவியுக
சண்டமாருதக் காலொடுசுழன்று பின்னி, விண்கொ
ண்டமேகபட லத்தைச்சினந்துதன் மெய்யன்பநெ
னவுகந்து, விடவரவின் மகுடமுடி சடசடெனவுத
றிநடுமேருவொடு பாய்ந்துகுத்தித், திண்கொண்ட
வல்லசுரர் நெஞ்சுபறைகொட்டத் திடுக்கிடவிடித்து
மோதித், திறைகொண் டடித்தமரர் சிறைகொண் ட
ணைத்திலகு திறைகொண்ட மயில்வாகனு, தண்கொ
ண்ட நீபமலர் மாலையணி மார்பனே சரச கோபால
ன்மருகா, சதுர்மறைகளேதந்த பரமகுருவாய் வந்
த சரவணபவானந்தனே. (௨)

துன்னுகைலாயகிரி மேருகிரிகந்தமலை தோகை
மலைகைலைமலைவான்; சோலைமலைமேவிய விராலிம
லைமன்னிய சுவாமிமலையுஞ் சிறந்த, சென்னிமலை
வேளூர் கடம்பவனமேலவய திருவருணையின் சோ
புரந், திருவாவினன்குடி பரங்கிரிதிருத்தணி சிவா
லயந் திருவேரகம், இத்நிலமதிக்குந் திருச் செந்தி
ன்முதலான வெண்ணப்படாதகோடி, எத்தலமுநீக
ருணை வைத்து விளையாடல்வித மெத்தனை யெனச்
சொல்லுவேன், தன்னைநிகரொவ்வாத பன்னிருகை

வேலனே சரசகோபாவன்மருகா, சதுர்மறைகளே
தந்த பரமகுருவாய்வந்த சரவணபவாநந்தனே. (௩)

நதியெங்குமூழ்கித் தலந்தோறுஞ்சுற்றியு நல்லநி
யமங்கள்செய்தும், நானென்றவாணவந் தள்ளினேனு
மென்றுசிவ ஞானங்கள் பலபேசியுங், கதிகொண்ட
மவுனியா யட்டமாசித்தியொடு கற்பந் தனைப்புசித்
துங், கண்ணிறுக மூடிச்சிவாநந்தமொன்று செயல்
கண்டிருந்தோமென்னவும், எதிரொருவருக்கொரு
வர் தர்க்கித்துமற்கட்டி யிப்படியனந்தகோடி, இது
வல்லவதுவல்லவென்றுபோ ராடுவதுமென்னவலைக
யோவறிகிலேன், சதமென்னவுன்னைநா னம்பினே
னம்பினேன் சரசகோபாலன் மருகா, சதுர்மறைக
ளேதந்த பரமகுருவாய்வந்த சரவணபவாநந்தனே

நாரதப்பிரமாதி யமரர்கிந்நரருரகர் நாரணன் மு
தற்பண்ணவர், நடுக்கம்பொருந்திய விடுக்கண்களை
ந்திட நடக்குங் குழந்தைவயதில், சூரபதுமாசுரன்
கயமுகன்றாருகன் றுன்முகன்பானுகோபன், றுட்
டகிரவுஞ்சக்கர வுஞ்சாசுரன்சிங்கனொடு சுற்றியவர
க்கனையெலாங். கோரசங்காரரண தூளிபடலங்கொ
ண்டு கூறுடியுனதுவெற்றிக், கொடியேறவிந்திரன்
மணி முடியறேவா னுடுகுடியேறவைத்த துரையே

தாரணியின்மேவு பரிபூரணவுலாசனே சரசகோபா
லன்மருகா, சதுர்மறைகளேதந்த பரமகுருவாய்வ
ந்த சரவணபவாநந்தனே. (௫)

சீலமிகுதற்பரனை புன்னித்ததேகத்தியானத் தெ
ழுந்துபொங்கிச், சில்லென்றுமெய்ம் மறந்தாநந்த
மவுநஞ்செனிக்க ங்குவிந்துகண்ணீர் ஆலிபொழிய
க் கருணையுள்ளங்கனிந் துருகவன்புருக வென்புரு
கவே, அங்கங்குழைந்து புளகிக்க நின்றுருகு வார
ப்படியுமொன் றறிவேனோ காலங்கழித்துண்டு வி
ஞுக்கலைந்துபல காலப்பிரபஞ்சமாயக், கடற் குட்
படிந்தே கிடக்கின்றபாசங் கடக்கும் படிக் கருளு
வாய், தாலமுழுதுண்டுநிலை கண்ட கோதண்டமால்
சரசகோபாலன்மருகா, சதுர்மறைகளேதந்த பரம
குருவாய்வந்த சரவணபவானந்தனே. (௬)

கல்லாலெறிந்துமுன் னெச்சிலைத்தந்துபின் கண்
ணைப்பறித்துதைத்துங், கருதுவகை சொல்லியுஞ்
செய்யசிறுமைந்தனைக் கறிசமைத் தூணமைத்தும்,
வில்லாலடித்துமோர் பாயலிற் றன்னுடைய விரத
ஞ்செலுத்துவித்தும், வேலையிற்றாளெடு சுழன்று
ம்பிரானிக்கு மெய்யன்பனென நடந்தும், நல்லா
ரெனப்பேறு பெற்றோர்களது பண்டை நாள்செய்த

பூசையீச, னன்கிருபையாமெனக் குன்கிருபையல்
லாது நாடுவது வேறுமுளதோ, சல்லாபவுல்லாச வி
ல்லேறு வல்லாள சரசகோபாலன் மருகா, சதுர்ம
றைகளேதந்த பரம குருவாய்வந்த சரவணபவாந
ந்தனே. (எ)

அற்புதமிகப்புகழ்திருப்புகழ் விருப்பொடு சொ
லருணகிரி தனையுகந்தாய், அஃபுயனி லின்பமுறு
கும்பமுநிமுன்புவர வன்புருகுடண்புணர்த்தாய், உ
ற்பனவரக்கனெடு சர்ப்பனமநப்பப் முடற்றநற்கீர
னொருநாள், உன்சலிகை தஞ்சமென நெஞ்சுருகவ
ஞ்சகிர வுஞ்சநேர்கிரிபிளந்தாய், எப்படியுமுற்படு
ம் வினைப்பயனலப்புமதை யிப்புவியிலேமறுப்டா,
யீதுகலிகாலமென் றெண்ண வொல் லுதுநானே
னையடியே னுகையாற், றற்பரதயாபரம னோரத
மகிழ்ந்தீதுதவு சரசகோபாலன் மருகா, சதுர்மறை
களேதந்த பரமகுருவாய்வந்த சரவணபவாநந்த.

நிராதமாயச் சுகந்தந்தவிக்கடுஞ் செநநஞ்செழி
த்தபின்பு, செகதலமயக்கமதி லேயென்குடித் தன
ந்நீயமருளோர்வங்கணம், போராடுசஞ்சாரடாசப
ந்தம்பிநிற் போகமடவாரிணக்கம், பொறிவாயலைக்
குமீ துள்ளபடிமுன்வினைப் போகந்தொடர்ந்தநெ

றியால், யாராலுமுடிவுறா தானலிதற்குநல் லறிவெ
ன்றதீபமொன்றுண், டவ்வழியிலேமனஞ் செல்லா
மலலைகின்ற வடியேனையாட்கொள்ளுவாய், தாமோ
றுபன்னிருபுயாசலக்கடவுளே சரசகோபாலன் மரு
கா, சதுர்மறைகளேதந்த பரமகுருவாய்வந்த சரவ
ணபவாநந்தனே. (௯)

தருகாமமோகமுறு திமிதிமிங்கலமிக்க தநலோ
பவநமுதலையாம், தற்கோபவநல்வடவைமூடத்துவ
ம்பாசி சஞ்சலமெனுந்தரங்கம், அரியதெளிவொரு
குமிழி யஞ்ஞானவாரிதியிலலைகின்றசீவராசி, அத்த
னையுமீனினமேமெஞருவிசுவலை யவ்வுயிரி லியானு
மொருவன், கருதரியபாரப்பெருங்கடல் கடந்தேக
டைத்தேறவேண்டுமென்றால், கைத்தவனை யில்லையி
னியென்செய்குவேனுனது காற்றவனை கைப் பற்றி
னேன், சரியமர்செய்நெடியபடைசூர கஜசிங்கமே
சரசகோபாலன்மருகா, சதுர்மறைகளேதந்த பரம
குருவாய்வந்த சரவணபவாநந்தனே. (௰)

தூயபொறியைந்தையுமடக்கிப் புலாதிகள் சுழல்
கின்றவழிமறுத்துச், சுழிமுனைதிறந்துமூலாதாரமே
லாத்துவாதசாந்தத்தை முட்டி, வாயுவை யிறுக்கிப்
பெல்த்துவரு குண்டலியைவவ்விமேற்கொணடு

த்து, வாசியை நடத்தியவ்வோசையைத்தாவென்றுவ
ழிகொண்டுநாதவெளியிற், றேயும்பரப்பிரமபூரண
வுலாசமதுசோதிப்பொன்னவெளிதோ, தொலையா
துநிலையாத தாகையாலுன்பதத்துணையே துணைப்ப
ற்றினேன், தாயகமனோகர மயூரவாகனமுருக சரச
கோபாலன்மருகா, சதுர்மறைகளேதந்தபரம குரு
வாய்வந்தசரவணபவாநந்தனே. (௰௧)

கண்ணேறுவாராது பிணியொன்று சேராதுகவலைப்
படாதநெஞ்சங், கலியாதுசலியாதுநலியாது மெலி
யாதுகலியென்றபேயடாது,விண்ணேறுமணுகாது
கன்மவினைதொடராதுவிஷமச்சுரம்வராது, வெய்ய
பூதம்பில்லிவஞ்சனைகடொடரா விஷம்பரவு செந்து
மடரா,எண்ணேறுசநநங்கள்கிடையாதுகாலபயமெ
ள்ளளவுமேதிராதிவ், வேழைக்கிரங்கியருடெய்வமு
னையல்லாம லின்னமொரு தெய்வமுளதோ, தண்
ணேறுகங்கைமலைமங்கைபருடங்கமே சரசகோபா
லன்மருகா, சதுர்மறைகளேதந்தபரம குருவாய்வந்
தசரவணபவாநந்தனே. (௰௨)

சுப்பிரமணியர்விருத்தம்-முற்றும்.